# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 235/மா/2024**
**நாள் 16.12.2025**

கோ. கோவிந்தராஜ்,
சென்னை.83. ..... முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி ..... எதிர் மனுதாரர்

சென்னை அசோக் நகர், 15வது தெரு, கதவு எண். 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ.கோவிந்தராஜ் என்பவரின் 6.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 6.11.2024 அன்று பெறப்பட்டு 235/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை அசோக் நகர், 15வது தெரு, கதவு எண். 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவர் தனது 6.11.2024 நாளிட்ட மனுவுடன் அனுப்பியுள்ள 27.11.2023 நாளிட்ட கடிதத்தில், தான் 21.08.2023 நாளிட்ட மனுவில் நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றகோரி அனுப்பிய மனுமீது நடவக்கை எடுக்காதது குறித்து புகார் தெரிவித்துள்ளார். மனுதாரரின் 21.08.2023 நாளிட்ட மனுவில் தெரிவித்திருப்பதாவது,

“சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, வார்டு எண்.117 எல்லைக்குட்பட்ட பாரதி நகர், 3–வது குறுக்குத் தெரு, கதவு எண்.3/5, 9/8 இரு கட்டிடங்களுக்கு நடுவே சுமார் 5 தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு பணி முடியும் தருணத்தில் இருப்பதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக் கட்டிட உரிமையாளர், மாநகராட்சி நடைபாதையை சுமார் 3அடி உயரம், 10–அடி அகலம், 50 அடி நீளத்தில் ஆக்கிரமித்து கட்டுமான வேலைகள் செய்து RAMP-அமைக்கப்பட்டுள்ளது. இதுபோல் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த இயலாது. மழை தண்ணீர் அங்கு செல்ல இயலாது. ஆக்கிரமிப்பை அகற்ற தன்நல பொதுநலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது’’ என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 9.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் மண்டல அலுவலர், அவர்களிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 18.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதார் 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமுலத்தை பதிவு செய்துள்ளார்:-

“சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, வார்டு எண்.117 எல்லைக்குட்பட்ட பாரதி நகர் 3வது குறுக்குத் தெரு, கதவு எண்.3/5, 9/8 ஆகிய இரு கட்டிடங்களின் நடுவே சுமார் 5 தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு பணி முடியும் தருணத்தில் இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றேன். மேலும் கட்டிட உரிமையாளர் மாநகராட்சி நடைபாதையை சுமார் 3அடி உயரம், 10அடி அகலம், 50 அடி நீளத்தில் ஆக்கிரமித்து கட்டுமான வேலைகள் செய்து RAMP-அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த இயலவில்லை. மேலும் இந்த RAMP-ஐ இடித்து அப்புறப்படுத்த கோரியும், இக்கட்டிடத்திற்கு பணி முடிவு சான்று வழங்கக் கூடாது எனவும், இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.’’

6. எதிர் மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் இளநிலை பொறியாளர் 18.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு நேரிடையாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமுலத்தை பதிவு செய்துள்ளார்:-

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ல் இளநிலை பொறியாளராக மூன்று மாதங்களுக்கு முன்பு பணியில் சேர்ந்தேன். எனவே மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக 10 தினங்களுக்குள் கள ஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அது குறித்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்’’ என்று தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் எதிர் மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் இளநிலை பொறியாளர் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, வார்டு எண்.117 எல்லைக்குட்பட்ட பாரதி நகர் 3–வது குறுக்குத் தெரு, கதவு எண்.3/5, 9/8 ஆகிய இரு கட்டிடங்களின் நடுவே சுமார் 5 தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு பணி முடியும் தருவாயில் உள்ளது என்பதும் மேலும் கட்டிட உரிமையாளர் மாநகராட்சி நடைபாதையை சுமார் 3அடி உயரம், 10அடி அகலம், 50 அடி நீளத்தில் ஆக்கிரமித்து கட்டுமான வேலைகள் செய்து RAMP-அமைக்கப்பட்டுள்ளது என்பதும் இந்த ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என்பதும் எனவே, இந்த RAMP-ஐ இடித்து அப்புறப்படுத்த கோரியும், இக்கட்டிடத்திற்கு பணி முடிவு சான்று வழங்கக் கூடாது என்பதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ல் இளநிலை பொறியாளராக மூன்று மாதங்களுக்கு முன்பு பணியில் சேர்ந்துள்ளதாகவும், மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக 10 தினங்களுக்குள் கள ஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அது குறித்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர் மனுதாரர் தரப்பில் பெருநகர

சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

8. இந்நேர்வில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இளநிலை பொறியாளர் தனது வாக்குமுலத்தில் 10 தினங்களுக்குள் களஆய்வு மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அது குறித்து சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளவாறு

(1) உரிய நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலருக்கு உரிய உத்திரவுகளை பிறப்பிக்குமாறும்,

(2) மேலும், மனுதாரரின் 6.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவ 9.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டு, அறிக்கை பெறப்படாததால், இம்முறைமன்ற நடுவ 28.3.2025 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட முறையீட்டு மனுமீது அறிக்கை உடனடியாக அனுப்புமாறு கோரியும், அறிக்கை சமர்ப்பிக்காத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலரின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014–ன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்யப்படும் என்று அறிவுறுத்தப்பட்டும், விசாரணை நாளான 18.11.2025 அன்று வரை அறிக்கை அளிக்காமல் இருந்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43–15–வது தெரு, அசோக்நகர், சென்னை 600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4–வது குறுக்கு தெரு, லேக் வியூ ரோடு,
சென்னை – 600 034.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்

22/12/25

27/12/25